Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 261

வெள்ளிக்கிழமை
15 ஓகஸ்ட் 2025

ஆடி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## பல்கலையில் இன்று தமிழியல் மாநாடு

யாழ்ப்பாணம், ஓக. 15
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 6ஆவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாடு, 'தமிழ்மொழி, இலக்கியச் செழுமையில் ஆழ்வார் பாசுரங்கள்' 11

## செம்மணி அகழ்வுக்கு 8 வாரங்கள் தேவை!

### சட்டமருத்துவ அதிகாரி சுட்டிக்காட்டு மேலதிக நடவடிக்கைக்கு உத்தரவு

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 15**

**செம்மணி மனிதப் புதைகுழியில், குறைந்தது மேலும் எட்டு வாரங்களாவது அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் நீதிமன்றத்தில் நேற்று சமர்ப்பணத்தை முன்வைத்தார்.** 11



செம்மணிப் புதைகுழி

## வாக்குமூலம் வழங்குவோரை அச்சுறுத்துகின்றது சி.ஐ.டி.

யாழ்ப்பாணம், ஓக. 15
செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் வாக்குமூலம் வழங்குபவர்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அச்சுறுத்தியுள்ளதாகப் பாதிக்கப் 11

## சி.ஐ.டி.யினரின் தலையீட்டை உடனடியாக அகற்றவேண்டும்

### ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 15
செம்மணிப் புதைகுழி விடயத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் தற்போதைய தலையீடு அவசியமற்றது என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார். 11

தேவநேசன் நேசையா குழு சுட்டிக்காட்டிய

## படுகொலைச் சூத்திரதாரிகள் தப்பியோடுவதற்கு வாய்ப்பு!

### செம்மணி வழக்கில் சுமந்திரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 15
செம்மணிப் புதைகுழி தொடர்பில் 2003ஆம் ஆண்டு கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையில் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவினர் பரிந்துரைத்த அறிக்கை, தற்போதைய நடவடிக்கைகளுடன் ஒத்துப்போகின்றது. எனவே, அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இராணுவத்தினர் நாட்டைவிட்டு தப்பியோட வாய்ப்புகள் உள்ளன - இவ்வாறு 11



## செஞ்சோலைப் படுகொலைகள்; நினைவேந்தல் உணர்வுபூர்வம்!

முல்லைத்தீவு, ஓக. 15
புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை வளாகத்தின் மீது ஸ்ரீலங்கா வான்படையால் நடத்தப்பட்ட தாக்குதலில் அப்பாவி மாணவிகள் கொல்லப்பட்ட 11

ஜி.பி.ஆர்.

## ஸ்கான் நடவடிக்கையை செம்மணியில் தொடர்க!

### யாழ்.சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 15
அரியாலை செம்மணி மனிதப் புதைகுழியில், ஜி.பி.ஆர். ஸ்கானர் (தரையை ஊடுருவும் ராடர்) மூலம், பரந்துபட்ட ஸ்கான் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளவேண்டும் என்று யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் சமர்ப்பணம் செய்துள்ளது.
செம்மணிப் புதைகுழி 04

## செம்மணிப் புதைகுழி அகழ்வு ஓகஸ்ட் 22

யாழ்ப்பாணம், ஓக. 15
செம்மணிப் புதைகுழி மீதான அடுத்தகட்ட அகழ்வுப் பணிகள் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
செம்மணிப் புதைகுழி மீதான அகழ்வுப் பணிகளின் இரண்டாம்கட்ட நடவடிக்கைகள் 04



**வீடொன்றின் மீது கொடூர தாக்குதல்**

விரிவு
பக்கம்:- 08

முச்சந்தி முரளி


**'விசாரிக்க வந்தவையே வில்லங்கத்தை குடுக்கினம் எண்டா நல்லா விளங்கிடும் பாருங்கோ'**

மன்னார்

## மடு அன்னைக்கு இன்று திருவிழா

### நற்கருணைப் பெருவிழா நேற்று பக்திபூர்வம்

மன்னார், ஓக. 15
இலங்கையின் பிரபல வழிபாட்டுத் தலங்களில் ஒன்றான, மன்னார் மடு அன்னையின் வருடாந்தத் திருவிழாத் திருப்பலி இன்று காலை 6.15 மணியளவில் 'கூட்டுத் திருப்பலியாக' ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. 04



உதயனின் ஊடக அனுசரணையில்

## சர்வதேச புத்தகத் திருவிழா இன்று கோலாகல ஆரம்பம்!

### அணிதிரண்டு கொண்டாடுமாறு சிறகுகள் அமையம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 15
உதயனின் ஊடக அனுசரணையில், யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் ஒழுங்கமைப்பில், 'யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் திருவிழா' இன்று, நாளை, நாளைமறுதினம் என மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது. 11

## நாட்டின் பொருளாதாரம் வேகமாக முன்னேற்றம்!

### மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15
இலங்கையின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விடவும் வேகமாக முன்னேறி வருகின்றது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையின் பொருளாதாரத்தில் இந்த வருடம் முன்னேற்றம் ஏற்படும் என்று ஏற்கனவே கணிக்கப்பட்டிருந்தது. ஆனால், 11

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 14.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4163
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள்
03 31 40 62
விசேட எழுத்து V

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 14.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1230
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள்
09 18 25 61

**NLB ஜய**
திகதி 14.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0189
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள்
0 3 3 4

**மெகா பவர்**
திகதி 14.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2269
ஆங்கில எழுத்து U
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கங்கள்
10 12 23 77

**மஹஜன சம்பத**
திகதி 14.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5921
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள்
9 9 8 4 4 7

**தன நிதானய**
திகதி 14.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1951
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள்
20 25 63 73
விசேட எழுத்து P

**அத சம்பத**
திகதி 14.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0496
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள்
8 4 4 7

**சுப தவசக்**
திகதி 14.08.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0037
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள்
05 12 17 51

## செம்மணி என்புத்தொகுதிகளை
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மரபணுப் பரிசோதனை செய்யலாம்!
### நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஓக. 15**

**செம்மணி மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளுக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மரபணுப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்றுச் சுட்டிக்காட்டப்பட்டது.**

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.
இதன்போது, செம்மணிப் புதைகுழியில் மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளை மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்துவது தொடர்பில் விவாதிக்கப்பட்டது.
இதன்போதே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மரபணுப் பரிசோதனை மேற்கொள்ளக்கூடிய வகையில் ஆய்வுகூடமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அதில் இந்தச் சோதனைகளை மேற்கொள்ள முடியும் என்று சட்டமருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தெரிவித்தார்.
இதன்போது, 'முதன்முதலிலே செய்யப்படுகிற பரிசோதனையாக செம்மணிப் புதைகுழியில் மீட்கப்பட்ட என்புத் தொகுதிகள் அமைவது பொருத்தமல்ல' என்று ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் குறிப்பிட்டார். 'தெளிவான நிபுணத்துவம் வாய்ந்த - அனுபவமுள்ள பல்கலைக் கழகம் அல்லது ஆய்வுகூடத்தின் மூலம் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுவதே பொருத்தமானது' என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார். (ம-26)




## ஊழியர் சேமலாப நிதி அறிக்கை நிறுவனங்களிடம்!

கொழும்பு, ஓக.15
2024ஆம் ஆண்டின் இரண்டாம் பாதிக்கான ஊழியர் சேமலாப நிதி (EPF) பெறும் உறுப்பினர்களின் கணக்குகளின் அறிக்கைகள், உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.
உறுப்பினர்கள் தங்கள் புதுப்பிக்கப்பட்ட கணக்கு அறிக்கைகளைத் தங்கள் நிறுவனங்களிடமிருந்து இருந்து பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் இலங்கை மத்தியவங்கி குறிப்பிட்டுள்ளது.
கணக்கு அறிக்கைகளில் வரவு வைக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை எண்கள் அல்லது பங்களிப்புகள் என்பன தொடர்பாக ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், அவற்றை 0112 206690 என்ற தொலைபேசி எண் ஊடாகத் தெரிவிக்கமுடியும் என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

## பொலிஸ் அத்தியட்சகர் இலஞ்ச ஊழலில் கைது

கொழும்பு, ஓக. 15
பொலிஸ் கலாசாரப் பிரிவின் பதில் பணிப்பாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஷ் கமகே, 14 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார் என இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



சதீஷ் கமகே, வேறு ஒருவரின் பெயரில் மூன்று வங்கிக் கணக்குகளைத் திறந்து, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள், பொலிஸார் சேவைகள் தொடர்பாக வருபவர்கள், மற்றும் பிற குற்றவாளிகளிடமிருந்து இலஞ்சமாகப் பெறப்பட்ட பணத்தை அந்தக் கணக்குகளில் வைப்பிலிட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

## இராவணனின் விமானத்தை தேடும் திட்டம் எதுவுமில்லை
### சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, ஓக.15
இராவணனுடன் தொடர்புடைய 19 விமானங்களை மீட்டெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று வெளியான செய்திகள் முற்றிலும் தவறானவை மற்றும் ஆதாரமற்றவை என இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழு மறுத்துள்ளது.
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழு நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், அவ்வாறான எந்தத் திட்டத்திலும் ஈடுபடவில்லை எனவும் விளக்கமளித்துள்ளது. (எ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 14.08.2025
தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0629
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கம் 9 7 7 7 9 5

**Super Ball**
திகதி 14.08.2025
தினம் வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2895
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கம் 26 39 43 79

**சனிதா**
திகதி 14.08.2025
தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கம் 24 53 55 58
வெற்றி வாரம் 5056

**SASIRI**
திகதி 14.08.2025
தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0747
வெற்றி இலக்கம் 29 44 45

**லக்ன ராசி**
திகதி 14.08.2025
தினம் வியாழக்கிழமை
கடகம்
வெற்றி இலக்கம் 08 18 50 62
சீட்டிழுப்பு வாரம் 4607

**KAPRUKA**
திகதி 14.08.2025
தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து V
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கம் 20 59 67 69
வெற்றி வாரம் 2071

**அத கோடிபதி**
திகதி 14.08.2025
தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கம் 08 09 32 49
வெற்றி வாரம் 2721

## ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்; மூடிமறைக்க அரசு முயற்சி
### குற்றஞ்சாட்டுகின்றார் நாமல்

கொழும்பு, ஓக.15
உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை மூடிமறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. பாதுகாப்புப்பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசாங்கத்துக்கு விடுக்கும் ஒரு எச்சரிக்கையாகும் என்பதால் அதற்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
உயிர்த்த ஞாயிறுத் தினத் தாக்குதல் விவகாரம் முழுமையாக அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது. குண்டுத் தாக்குதலை பிரதான அரசியல் பரப்புரையாக்கியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது. குண்டுத்தாக்குதலின் பிரதான தற்கொலைதாரிகளின் தந்தை மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர். அவருக்கு எதிராகக் கட்சி மட்டத்தில் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. குண்டுத்தாக்குதலின் உண்மை வெளிவர வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம் ஒழுங்கமைத்து நடாத்தும்
யாழ்ப்பாண சர்வதேச புத்தகத் திருவிழா -2025
Jaffna International Book Festival - 2025
AUGUST 15 16 17
10:00 am to 08:30 pm
யாழ்ப்பாண திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில்
அச்சு ஊடக அனுசரணை
உதயன்
மேலதிக விபரங்களுக்கு CCIY உடன் தொடர்பு கொள்ளவும்
CCIY
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
No 63- NALLUR CROSS ROAD, NALLUR, JAFFNA | info@cciy.lk | 021 222 6608 / 070 366 3603

## ஆன்மிக அருளுரை

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுவரும் ஆன்மிக அருளுரை இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு "சிவனுக்கு ஓதியது எப்பொருளோ? எனும் தலைப்பில் ஆன்மிக அருளுரை ஆற்றுவார். (ச-41-66)

# 18 ஆம் திருவிழா




## பரவசமான வேலனாய் தினம் வீதியுலா வருகின்றான்

மூலநோய் தீர்க்கும் முருகன் நல்லை
முத்தமிழும் நான்மறையும் ஆன கந்தன்
பக்தியுடன்வரும் அடியார்கள் பழவினைகள்
அழித்திடவே பாங்கியர் இருவருடன்
பழம்பதியாம் பண்டைச்சங்கிலியன்
மண்ணில் பரவசமான வேலனாய்
தினம் வீதியுலா வருகின்றான்

**திருமுறைச் செல்வர் பாலசுப்பிரமணியம்**
வேலணைபாலா ஜே.பி

## திருவாய் மலர்வாய் திருமுருகா

கொடியேறிக் குடியாள வந்தவனே!
குற மாதைத் துணையாக் கொண்டவனே!
விழி பன்னிரண்டாகி நின்றவனே எமக்கு நல்
வழி தந்து உதவாயோ மன்னவனே

திருவிழா நாள்களை எண்ணியெண்ணி
திருக் கணிதம் படித்த மண்ணில்
திருகி கொன்று புதைத்த கணக்கில்
திடுக்கிடும் தகவல் 'நூறுக்கு மேலாம்'
ஐயகோ! தாங்க முடியுதில்லையே

நெல் விளையும் விவசாய நிலத்தில்
சொல்லிட முடியாச் சோகங்கள் காணீரோ
நல்லூரா நின் கண்கள்
நமைக் காணா திருப்பதேனோ?

பாலும் பழப்பாகும் தேனும்
பருகத் தந்த பெருமக்கள் மனதில்
பாரம்! கண்ணில் ஈரம் தந்து
பெருவிழாக் காண்பதுதான் பெருமையோ?
கந்தா எம் கதறல் மொழிகள் உன்
காதுகளைத் துளைக்காத தேனையா?

ஐயா! முருகையா! சைவச் சிறப்புக்கு
சான்றுரைத்த மண்ணில் விசித்திரச்
சாவைத் தடுத்திட முடியாதெனில்
எமைக் காக்காத் தங்கவேலை
எதற்கேந்துகிறாய் எடுத்துரை எமக்கு
தேரேறி வருமுனக்குத்
தேவாரம் பாடிவர ஊருண்டு
தேடுவாரின்றிப் புதையுண்டோருக்கு
நீதி தர யாருண்டு திருமுருகா?

**சாந்தையூர் வினிஸ்**

## தெய்வீக இசை அரங்கு

யாழ்ப்பாணம், ஓக.15

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப்பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக தெய்வீக இசை அரங்கு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 10.45 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இசைக்கலாமணி நடேசு செல்வச்சந்திரன் குழுவினரின் தெய்வீக இசை அரங்கம் நிகழ்வு இடம்பெறும். (ச-41-66)

## நயினை - நல்லூர் பஜனை யாத்திரை

யாழ்ப்பாணம், ஓக.15

நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாவையொட்டி ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் நயினை நல்லூர்த் திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாடு, வேல் பூசையுடன் வேல் எடுத்துக்கொண்டு பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிகாட்டுவான், புங்குடுதீவு, வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, யாழ்ப்பாணம், வில்லூன்றி, கந்தர்மடம் வழியாக 21ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவன்று அதிகாலை நல்லூரான் திருத்தலத்தை வந்தடையும்

திருத்தேரின் பின் பஜனை வேல் அர்ச்சனையுடன் நிறைவுறும். யாழ்ப்பாணத்திலிருந்து பாதயாத்திரையில் கலந்துகொள்ளும் அடியவர்கள் 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6மணிக்கு கந்தர்மடம் சிவஉதய நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் ஒன்றுகூடி நயினாதீவு செல்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

## தெய்வீகத் திருக்கூட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக.15

நல்லூர்ப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் பதினெட்டாம் நாள் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. வேதாந்த மடம், ஸ்ரீ சிவ குருநாதபீட 8ஆவது குருபீடாதிபதி வணக்கத்திற்குரிய ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் முன்னிலை வகிக்க, சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் செயலாளர் சிவஸ்ரீ சோ.கேதீஸ்வரக்குருக்கள் தலைமையில் இத்திருக்கூட்ட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கலைநிகழ்வுகளை பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவின் வேவில் வீரகத்தி விக்னேஸ்வரா அறநெறிப்பாடசாலை, வல்வை முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை, திக்கம் மடத்துவாசல் சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மற்றும் மருதாம்புலம் பத்திரகாளி அம்பாள் கலைப்பயிற்சி நிலையம் ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கவுள்ளனர்.

சிறப்பு நிகழ்வுகளாக வனஸ்ஜினி ஸ்ரீகரசர்மாவின் தனி நடன நிகழ்வும், நல்லூர்க் கீதவாகினி இசைக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் பக்தி இசைநிகழ்வும், இணுவையூர் ஸ்ரீவள்ளி வில்லிசைக் குழுவினர் வழங்கும் வில்லுப்பாட்டு நிகழ்வும், சிவ நர்த்தனாலய மாணவர்கள் வழங்கும் பரதநாட்டிய நிகழ்வும், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ச-41)





முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேசத்தின் பாண்டியன்குளம் பதியில் அமர்ந்து மக்களுக்கு அருள்பாலிக்கும் சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழாவின் தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்றது. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி பயணத்தின் போது (வி.புருசோத்தமன் NIC No-199000301114) தேசிய அடையாள அட்டை. வாகன சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய Purse ஒன்று தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்திற்கு அறியத்தரவும்.

தொடர்பு: 0777 172 527

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு கீழ் வரும் பணி நிலைக்குரிய பணியாளர் தேவை.

தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்.

- கொத்து றொட்டி தயாரிப்பாளர்
- பிறைட் றைஸ் தயாரிப்பாளர்
- உணவு பரிமாறுபவர்

(CR 45815) A

தொடர்புகளுக்கு : 077 649 1027



படுகொலைக்கு நீதிவேண்டி

# புங்குடுதீவு - யாழ். இடையே தனியார் பேருந்து புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 15

இந்த மாதம் 10ஆம் திகதி தனது வீட்டிலிருந்த வேளையில் படுகொலை செய்யப்பட்ட ஐயாத்துரை அற்புதராசாவின் (அகிலன்) படுகொலைக்கு நீதி வேண்டியும், கொலையாளிகளை விரைந்து கைதுசெய்யக் கோரியும் புங்குடுதீவு தனியார் பேருந்துச் சேவைச் சங்கம் இன்று வெள்ளிக்கிழமை பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளது. (ம-66)


## காணவில்லை



கடந்த 11.08.2025 தொடக்கம் **பரமேஸ்வரன் சாந்தினி** வயது 53, வைத்தியசாலைக்கு சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை. இவரை கண்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**கணவர்:**
**சி.பரமேஸ்வரன்**
077 1993 151
077 2720 100


### செம்மணிப்...

தற்போது இடம்பெற்றுவருகின்றன. பணியாளர்களின் பணிச்சுமை, ஓய்வு உள்ளிட்ட காரணங்களைக் கருத்திற் கொண்டு பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில், எதிர்வரும் 22ஆம் திகதியன்று அகழ்வுப் பணிகள் மீளவும் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

### மடு...

மன்னார் மறைமாவட்ட ஆயர், வெளிமாவட்ட ஆயர்கள் இணைந்து இந்தத் திருவிழாத் திருப்பலியை ஒப்புக் கொடுக்கவுள்ளனர்.

மடு அன்னையின் திருவிழாவுக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரம் பக்தர்கள் குழுமியுள்ளனர். இந்த நிலையில், திருவிழாத் திருப்பலிக்கு முதல் நாள் கொண்டாடப்படும் நற்கருணைப் பெருவிழாவும் ஆராதனைகளும் நேற்று இரு மொழிகளிலும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### ஸ்கான்...

தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் சட்டத்தரணிகளான குருபரன் மற்றும் ஜெயரூபன் ஆகியோர் மன்றில் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

இதன்போதே, ஜி.பி.ஆர். ஸ்கானர் மூலம் ஆய்வுப் பணிகளைத் தொடர வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இந்தக் கோரிக்கை தொடர்பில் பரிசீலித்து அதை புதைகுழி அகழ்வு தொடர்பான பட்ஜெட்டுக்குள் உள்ளடக்க வேண்டும் என்று நீதிபதி கட்டளை வழங்கினார். (அ-ம-26)


## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 02 . 1949



மறைவு 13 . 08 . 2025

**கிப்பொலிற்றா எட்வேட் (சறோ)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கிப்பொலிற்றா எட்வேட் (சறோ) அவர்கள் கடந்த (13.08.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்ஷல்-றோசலீன் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை-சிசிலியா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற எட்வேட்டின் அன்பு மனைவியும், சிறோமியின் (UK) அன்புத் தாயாரும், ஜெயசுதனின் (UK) அன்பு மாமியாரும், எலைனா பிரீத்தி (UK), ஜேடன் பிரவீன் (UK) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான லோறன்ஸ், கிளிபேட், அருளானந்தம், ஸ்ரெலா மற்றும் அன்ரனி (நெல்சன்), புளோறா (பேபி-கனடா), கெலன் ஜெசி (ராஜினி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான G.Sமரியதாசன், வயலட் கொன்சி, சாள்ஸ் மற்றும் மகேஸ்வரி (பிரான்ஸ்), ரஞ்சினி (கனடா), J.Aமரியதாசன் (கனடா), திரேசா (கனி), அந்தோனிப்பிள்ளை, டேவிட், பேணாட், மரியநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் லண்டனில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 254 6060 (யாழ்ப்பாணம்)
0044 7961 303526 (லண்டன்)

73, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 09 . 1942



இறப்பு 12 . 08 . 2025

**திருமதி தவரட்ணம் பிலோமினா (றோஸ்)**

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. தவரட்ணம் பிலோமினா (றோஸ்) அவர்கள் கடந்த (12.08.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. சின்னையா தவரட்ணம் (வடமாகாண கடற்றொழில் அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனத்தின் முன்னாட் தலைவர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - றோசம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு சின்னையா- நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகளும், திருமாறன், றதிமதி, மதிமாறன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அலோசியஸ் அலெக்சாண்டர், அல்வீனம்மா (ராணி), சகாயமேரி (பபி) ஆகியோரின் சிறிய தாயாரும், அனோமா, அன்ரனி (கனியூட்), மகிழ்நங்கை ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

காலஞ்சென்றவர்களான அலோசியஸ் திரேசம்மா (லில்லி), அந்தோனிப்பிள்ளை சேவியர், சின்னராசா (லக்ஸ்மாலா), ஜோசப் (புஸ்பராசா) மற்றும் ஜேம்ஸ் (சின்னத்துரை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான அலோசியஸ் திரேசம்மா (லில்லி), அந்தோனிப்பிள்ளை சேவியர், சின்னராசா (லக்ஸ்மாலா), ஜோசப் (புஸ்பராசா) மற்றும் ஜேம்ஸ் (சின்னத்துரை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான அலோசியஸ் (பொன்னுத்துரை), நவமணி மற்றும் நாகம்மா, அன்னமலர், வரதராணி, காலஞ்சென்றவர்க ளான சீவரத்தினம், அழகரத்தினம், ஜெயராணி மற்றும் சிவஞானரத்தினம், ஜெயரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னார் யுனிஸ்ரன், ஹேமந்த, பிரசாதினி, பிராங்கோ, திருநயனி, மறவன் மற்றும் எமா ஆகியோரின் அன்புநிறை பேர்த்தியும் ஆவார்.

அன்னார் நோவா, ஆதன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.08.2025) சனிக்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மரியன்னை (கொஞ்சேஞ்சி மாதா) சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

...கரை வீதி,
குருநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 44680) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நம்பிக்கையில்லாப் பிரேரணை அரசாங்கத்தையே பலப்படுத்தும்

## எதிர்க்கட்சிகள் பொறுப்புணர்வுடன் செயற்படுக திலித் ஜயவீர தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 15**

**அரசாங்கத்துக்குள் பிளவு ஏற்பட்டுள்ள நிலையில், நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பது அரசாங்கத்தை பலப்படுத்துவதாகவே அமையும். எனவே, பிரதான எதிர்க்கட்சி பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர, கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாக இருந்த காலப்பகுதியில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுச் சம்பவத்தை மையப் படுத்தியே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

இராணுவத்தில் அவர் செயற்பட்ட காலப்பகுதியை மையப்படுத்தியதாக பிரேரணை வருவதால் அது ஒட்டுமொத்த இராணுவத்தின் புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தும்.

அதேவேளை, அரசாங்கத்துக்குள் பிளவு உள்ளது என்ற கருத்து நிலவுகின்றது. இந்த நிலையில் அவ்வாறு இல்லை என்பதை இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை உறுதிப்படுத்தி விடும்- என்றார். (ச-44)



# 24 மணிநேரத்தில் 3 துப்பாக்கிச்சூடுகள்

கொழும்பு, ஓக. 15

மினுவங்கொட, பத்தடுவனப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியுள்ளனர்.

இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை ஹங்வெல்லவின், பஹத்கமப் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இதில் ஒருவருக்கு காலில் காயம் ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை மீகொடப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# குஷ் போதைப்பொருள் கடத்தியவர் கைது

கொழும்பு, ஓக. 15

தாய்லாந்தில் இருந்து குளிரூட்டி சாதனத்துக்குள் மறைத்துவைத்து நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட சுமார் 40 மில்லியன் ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளைக் கொழும்பு மத்திய குற்றப்புலனாய்வுப் பணியகம் கைப்பற்றியுள்ளது.

இந்த குஷ் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# இவ்வருடத்தில் இதுவரை 80 துப்பாக்கிச்சூடுகள்

கொழும்பு, ஓக. 15

நாட்டில் இந்த வருடத்தில் இதுவரை பதிவான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச்சம்பவங்களில் 44 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 47 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## விவசாய முகாமைத்துவம்

# அமைச்சர் லால்காந்தவுடன் வவுனியாவில் கலந்துரையாடல்



வவுனியா, ஓக.15

காலநிலை மாற்றத்தைத் தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று விவசாய அமைச்சர் லால்காந்த தலைமையில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற குறித்த கூட்டத்தில் ஒருங்கிணைந்த நீர் மேலாண்மைத் திட்ட அறிமுகம், திட்டச் செயற்பாடுகள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

கூட்டத்தில் வவுனியா மாவட்டச் செயலாளர் சரத் சந்திர, விவசாய அமைச்சின் அதிகாரிகள், மேலதிக மாவட்டச் செயலர், பிரதேச செயலாளர்கள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-110)

# ஆரில பிழை

பேன் பிடிச்ச தலையும், போன் பிடிச்ச பிள்ளையும் எந்த நேரமும் சொறிஞ்சு கொண்டேதான் இருக்குமே தவிர உருப்படுறதுக்கு வாய்ப்பே இல்லை. முந்தியென்னெண்டால் வெளியால விளையாடப் போன பிள்ளையள் வீட்டை போகவே மனமில்லாமல் நிப்பினம், ஆனால் இப்ப எல்லாப் பிள்ளையளும் புறொயிலர் கோழி மாதிரி போனைப் பிடிச்சுக்கொண்டு வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கினம். "என்ர பிள்ளை எண்டைக்குப் போனைத் தொட்டானோ அண்டையில இருந்து படிப்பு எண்டதே இல்லை எண்டு பெற்றோர் புலம்புகினம். ஆனால் சின்னப் பிள்ளையளிட்ட போனைக் குடுத்துப் பழக்கினது ஆர்? பெரியாக்கள் தானே. இப்ப அநேகமா பிள்ளையள் தாலாட்டுக் கேட்டு நித்திரை கொள்ளுறேலை, போனில பாட்டுக் கேட்டபடிதான் நித்திரை கொள்ளப் பழக்கிறம். இப்பிடி ஏணையில இருக்கேக்கையே குழந்தையைப் போனுக்கு அடிமையாக்கிப் போட்டு, இப்ப வந்து பிள்ளை எந்தநேரமும் போனை நோண்டுது, படிக்குதில்லை எண்டு புலம்பினால் அது ஆரில பிழை?

கிட்டடியில பிரைமறிப் பள்ளிக்கூடமொண்டில , பள்ளிக்கூடம் விட்டும் பிள்ளையள் வெளியில வரேல்லை. வெளியில பிள்ளையளை ஏத்தவந்த பெற்றோர் என்னவோ ஏதோவோ எண்டு பதறிக்கொண்டு, குட்டி போட்ட பூனையள் மாதிரி பள்ளிக்கூடக் கேற்றுக்கு வெளியில அங்கையும் இஞ்சையுமா ஓடித்திரிஞ்சினம். ஒருத்தருக்கும் ஏன் பிள்ளையள் வெளியால வரேல்லை எண்டு தெரியேலை. அரை மணித்தியாலத்துக்குப் பிறகுதான் எல்லாப் பிள்ளையளும், கூட்டால திறந்துவிட்ட புறாக்கள் மாதிரி ஓடி வந்திருக்கினம். அங்க படிக்கிற பிள்ளை ஒண்டு அண்டைக்கு பள்ளிக்கூடத்துக்குப் போன் ஒண்டைக் கொண்டந்திருக்கு. ஆனால் கடைசிப்பாட நேரம் போனைக் காணேலையாம். அந்தப் பிள்ளை போனைக்காணேலை எண்டு போய் ரீச்சரிட்ட அழுது கொண்டு முறைப்பாடு குடுக்க, எல்லாப் பிள்ளையளையும் செக் பண்ணியும் போன் கிடைக்கேல்லை. பிறகு பள்ளிக்கூடம் முழுக்க எல்லாரும் தேடி, ஒருமாதிரி பாத்ரூமுக்குக் கிட்ட விழுந்து கிடந்து எடுத்தபிறகுதான் எல்லாப் பிள்ளையளையும் வெளியில விட்டிருக்கினம். ஒண்டில் போன் கொண்டந்த பிள்ளை போனை பாத்ரூம் போகேக்க விழுத்தியிருக்க வேணும், இல்லாட்டி ஆரோ அதை எடுத்துப்போட்டு பிடிபடக்கூடாது எண்டு அங்க எறிஞ்சிருக்க வேணும்.

சரி, இப்ப அதெல்லாம் இருக்கட்டும். இந்தப் போன் பிரச்சினையில ஆரில பிழை? போனைப் பள்ளிக்கூடம் கொண்டந்த பிள்ளையில பிழையா? இல்லாட்டி இவ்வளவு பெறுமதியான போனைப் பிள்ளையிட்ட குடுத்துவிட்ட பெற்றோரில பிழையா? தங்கட வகுப்பு பிள்ளை ஒண்டு போன் கொண்டந்ததுகூட தெரியாமல் இருக்கிற ரீச்சர்மாரில பிழையா? வடிவா யோசிச்சால் எல்லாரிலையும் பிழை மாதிரித்தான் கிடக்கு. ஆனால் கூடப் பிழை பெற்றோரிலதான். தங்கட பிள்ளைக்கு அவை குடுத்துவிடுற போன், மற்றப்பிள்ளையளையும் பழுதாக்கிப் போடுமெண்டு அவைக்குத் தெரிஞ்சிருக்க வேணும். ஒரு பிள்ளை போன் கொண்டந்தால் மற்றப் பிள்ளையளும் அப்பிடிக் கொண்டுவர வெளிக்கிடுவினம். இந்தப் பால்குடி வயதிலையே தங்களுக்கும் ஒரு ஸ்மார்ட் போன் வேணுமெண்டு வீட்டில அடம் பிடிப்பினம். இல்லாட்டி மற்றப்பிள்ளையள் கொண்டுவாற போனைக் களவெடுக்க வெளிக்கிடுவினம். அதோட படிக்கிறதை விட்டிட்டு போனோட தான் மினக்கெடுவினம். சின்னஞ்சிறுசுகள் இப்பிடி சீரழியிறதுக்கு நாங்கள்தான் காரணம். முக்கியமா பெற்றோர் பள்ளிக்கூடங்களில போய்த் தங்கட பிள்ளையள் போனோட தான் கனநேரம் மினக்கெடுகினம் எண்டு புலம்பாமல், அந்தப் போனை அவைக்குக் கிட்டவும் அண்டவிடாமல் பார்த்தாலே இந்தப் பிரச்சினை ஈஸியா இல்லாமல் போடும் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வங்கி ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக.15
ஊழியர்களின் நலனில் அக்கறை எடுக்காமை, போனஸ் குறைப்பு உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கோரியும் அதற்கான முயற்சிகளில் அரசு அசமந்தப் போக்குக் காட்டிவருகின்றமை ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்று முன்தினம் யாழ். மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிக் கிளை வலையமைப்புகளை மூடி, அனைத்து பரிவர்த்தனைகளிலிருந்தும் விலகி இலங்கை வங்கி ஊழியர் சங்கம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

அத்துடன் தங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், எதிர் வரும் காலத்தில் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகவும் இலங்கை வங்கி ஊழியர் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் இலங்கை வங்கி ஊழியர் சங்க உறுப்பினர் கருத்து தெரிவிக்கையில்

கடந்த 2024 ஆம் ஆண்டு வரலாற்றில் இலங்கை நிறுவனம் ஒன்று பதிவுசெய்த மிகச்சிறந்த மற்றும் மிகப்பெரிய இலாபமாக 107 பில்லியன் ரூபாவை இலங்கை வங்கி பதிவு செய்திருந்தது.

குறிப்பாக இலங்கை வங்கி ஈட்டிய இலாபத்தில் பெரும்பகுதி திறைசேரிக்கே செலவிடப்படுகிறது.

இலங்கை வங்கியின் நிர்வாகமும் இயக்குநர்கள் குழுவும் ஊழியர் களுக்கு வழங்க முடிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட ஊக்கத்தொகையைக் குறைக்கவும், நிதி அமைச்சகத்துடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் நிதி, துணை அமைச்சர்கள் இருவரும் எட்டிய ஒப்பந்தங்களை செயற்படுத்தவும் நிதி அமைச்சகம் இன்னும் நடவடிக்கை எடுக்காது அசமந்தப் போக்கிலேயே இருக்கின்றது.

வாக்குறுதிகள் வழங்கப்பட்டு மாதங்கள் பல கடந்துவிட்டன.

வழங்கப்பட்ட வாக்குறுதிகளை செயற்படுத்த நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

அரசாங்கம் தீர்வுகளை வழங்கவில்லை என்றால், தொடர் வேலை நிறுத்தத்தைத் தொடங்க முடிவு செய்துள்ளோம் - என்றார்.

(ச-20)

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
## பகிரங்க பிஸ்கால் ஏல விற்பனை
## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

சொப்ட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி
இல -13,
தி பொன்சேகா பிளேஸ்,
கொழும்பு - 04
- வழக்காளி

வழக்கு இலக்கம் : **DDR/904/2019** எதிர்

01. வியாபார பதிவு இல - 675VSBR
எனும் ராஸ்குமார் ஸ்டோர்ஸின் தனி நபர் உரித்தாளர்,
சுந்தரலிங்கம் ராஜ்குமார்,
ஏலாலை தெற்கு, சுன்னாகம்.

02. வேலுப்பிள்ளை சின்னப்பு பாலசந்திரன்
இல - 140, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

03. ராஜரத்தினம் சுரேஷ்குமார்
மருதடி, புத்தூர் வடக்கு, புத்தூர்.

- எதிராளிகள்

இந்த வழக்கின் எதிராளிகள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் இல.DDR/904/19 கொண்ட வழக்கின் 2022.08.10 ஆம் திகதிய தீர்வைக் கட்டளைக்கமைய இந்த வழக்கின் எதிராளிகளினால் வழக்காளிக்கு செலுத்த வேண்டும் என தீர்ப்பளித்துள்ளதால்,

அதாவது 05.02.2019 ஆம் திகதிக்கு இருபத்தி ஆறு லட்சத்து எண்பத்தேழாயிரத்து நூற்று தொன்னூற்றி ஆறு ஏழு சதம் (ரூ.2,687,196.07) மற்றும் 05.02.2019 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டிய வட்டி ஒரு லட்சத்து நாற்பதாயிரத்து அறுபத்தி இரண்டு ஐம்பத்தி ஐந்து சதம் (ரூ. 140,062.55) என 2019.02.05 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டிய மொத்தத் தொகை இருபத்தி எட்டு இலட்சத்து இருபத்தேழாயிரத்து இருநூற்று ஐம்பத்து எட்டு ரூபா அறுபத்து இரண்டு சதம் (ரூ.2,827,258.62) பணம் மற்றும் அப் பணத்திற்கு வருடாந்தம் 17.78% வருடாந்த வட்டி மற்றும் வழக்கு செலவு செலுத்த வேண்டும் என தீர்ப்பளித்துள்ளதால்,

அப் பணத்தினை செலுத்துவதற்கு எதிராளிகள் தவறி அல்லது புறக்கணித்துள்ளதனால் கொழும்பு மாவட்ட நிதிமன்றின் மேற்படி வழக்கின் கட்டளை பிரகாரம் மற்றும் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், இந்த வழக்கில் 1 ஆம் எதிராளி உரிமை கோரும் NP LK-5857 என்ற இலக்கம் கொண்ட மோட்டார் லொறி வாகனம் 2024.10.21 ஆம் திகதி எழுதி தடைசெய்யப்பட்டது.

அவ்வாறு தடை செய்யப்பட வாகனம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அல்லது வழக்காளியின் பணத்தை செலுத்துவதற்கு தவறியுள்ளதனால் தடை செய்யப்பட்ட லொறி 2025 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 04 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு ஏழாலை தெற்கு, சுன்னாகத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கின்றேன்.

வெற்றிகரமான ஏலதாரர்கள் முழு ஏலத் தொகையையும் ரொக்கமாக செலுத்த வேண்டும் மற்றும் வாங்கிய பொருட்களை ஏல தளத்தில் இருந்து அகற்ற வேண்டும்.

சிவில் நடைமுறைச் சட்டத்தின் 258 ஆம் பிரிவிற்கு அமைய ஏலத்தில் விற்கப்பட்ட பொருட்களுக்காக செலுத்த வேண்டிய முதல் ரூ.7,500/= க்காக ரூ.150/= மற்றும் ரூ.7500/= க்கு அதிகமான ஒவ்வொரு ரூ.1000/= க்காக ரூ.5/= வீதம் ஏலக் கட்டணம் மற்றும் 3% வீதம் பிஸ்கால் கட்டணம் மற்றும் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் வாங்குபவரினால் செலுத்த வேண்டும். எவரேனும் ஒருவர் இங்கு குறிப்பிட்டுள்ள வாகனத்தை உரிமை கோருமிடத்து அவர் விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

பொதுமக்கள், மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு மேற்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை பார்வையிடலாம்.

சகல கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வாகனத்தின் பரிசோதனை ஏலத்தினை ஆரம்பம் செய்வதற்கு முன்பு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற பதிவாளர் / பிரதி பிஸ்காலின் அனுமதியுடன் செய்வதற்கு முடியும்.

2025 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 06 ஆம் திகதியன்று

பதிவாளர்/ பிரதி பிஸ்கால்
மாவட்ட நீதிமன்றம்
மல்லாகம்.

**ஏல விற்பனை செய்யப்படும் வாகன விபரம்**

1. NP LK – 5857 இலக்கம் கொண்ட லொறி

**பதிவாளர்/ பிரதி பிஸ்கால்**
**மாவட்ட நீதிமன்றம்**
**மல்லாகம்.**

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை - சுழிபுரம்
### அனுமதியின்றி குழாய் கிணறு அமைப்பதை தடை செய்தல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பிரதேச சபையின் அனுமதியின்றி குழாய் கிணறு அமைத்தல் உடனடியாக அமுலாகும் வகையில் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

மேலும் பிரதேச சபை எல்லைக்குள் குழாய்க்கிணறு அமைக்கும் பணியில் ஈடுபடும் இயந்திரம், பொறித் தொகுதிகள் வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் பதிவு செய்திருத்தல் கட்டாயமானது.

இந் நடைமுறைகளை மீறி குழாய் கிணறு அமைக்கும் பணியில் ஈடுபடும் இயந்திரம், பொறித் தொகுதிகள் சபையால் பறி முதல் செய்யப்படுவதுடன் ஆதன உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தினூடாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**ச.ஜயந்தன்,**
**தவிசாளர்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## மனித உரிமைகளை மதிப்பதும் மாற்றமே

அமெரிக்கா தனது 2024ஆம் ஆண்டுக்கான மனித உரிமை நடைமுறைகள் பற்றிய உள்நாட்டு அறிக்கையில், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியிருக்கின்றது. தடுப்புக் காவலில் தனிநபர்கள் மற்றும் சந்தேகநபர்களின் மரணங்கள், பத்திரிகையாளர்களைத் துன்புறுத்துதல், கருத்துச் சுதந்திரத்தின்மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் தவறான பயன்பாடு என்பன அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இவ்வாறு அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேசநாடுகளாலும், அமைப்புகளாலும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவல்ல. ஆனால் எத்தனை தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டபோதும், இலங்கை மனித உரிமைகள் விடயத்தில் எந்த முன்னேற்றத்தையும் காட்டவில்லை என்பது வருத்தத்துக்குரியது.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் பல தசாப்தங்களாகவே நிலவுகின்றன. உள்நாட்டுப் போரின்போதும், இறுதிப்போரின்போதும் அதற்கு பிந்தைய காலத்திலும் காணாமல் ஆக்கப்படுதல், சித்திரவதை, அரசியல் எதிர்ப்பாளர்களுக்கு எதிரான தாக்குதல், பத்திரிகையாளர்களின் கொலை மற்றும் மிரட்டல்கள் போன்றவை சர்வதேச மட்டத்திலும், உள்நாட்டிலும் அரசாங்கங்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளாக இருக்கின்றன. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் இதுவரை காத்திரமான நடவடிக்கைகள் எவற்றையும் எடுக்கவில்லை என்பதுடன், மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட அதிகாரிகளைக் காப்பாற்றும்வகையிலேயே செயற்பட்டிருக்கின்றது.

மனித உரிமைகளின் மேம்பாடு தொடர்பாக இலங்கை அரசாங்கம் பல்வேறு கருத்துகளை முன்வைத்தாலும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்காமல் - தண்டனையில் இருந்து விலக்களிக்கும் அதன்போது, பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் ஆழமான நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அந்த நம்பிக்கையீனத்தின் விளைவாகவே பாதிக்கப்பட்ட மக்கள் குற்றங்களில் ஈடுபட்டவர்களைப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்த சர்வதேசப் பொறிமுறை ஒன்றை நாடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கையின் பின்னால் உள்ள நியாயத்தைப் புரிந்துகொள்ள மறுக்கும் இலங்கை - மனித உரிமை மீறல்களையும் தொடர்ந்தும் கண்டுகொள்ளாமலேயே இருக்கின்றது. அமெரிக்காவின் அறிக்கை கடந்த ஆண்டின் முற்பகுதியை அடிப்படையாகக்கொண்டு வெளியிடப்பட்டிருந்தாலும் - அதன்பின்னரான காலப்பகுதியிலும் மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை பெரியளவிலான முன்னேற்றத்தைக் கொண்டிருக்கவில்லை.


'கடந்தகால அரசாங்கங்களில் இருந்து நாம் மாறுபட்டவர்கள்' என்று கூறிக்கொள்ளும் தற்போதைய அரசாங்கம் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மக்களுக்கு நம்பிக்கையளிக்கக்கூடிய, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கக்கூடிய வழிகளை நோக்கித் திரும்பவேண்டும். மனித உரிமைகள் என்பது ஓர் அரசாங்கம் விருப்பப்படி வழங்கும் சலுகை அல்ல என்பதையும், அது ஒவ்வொரு குடிமகனுக்கும் உரித்தான, மறுக்கமுடியாத உரிமை என்பதையும் ஆட்சியில் இருப்பவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். இலங்கை, தன் சர்வதேசநற்பெயரை மீட்டெடுக்கவும், இன நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை வளர்த்தெடுக்கவும் விரும்பினால், வாக்குறுதிகளுக்கு அப்பாற்சென்று, சட்டநடைமுறைகளில் மற்றும் ஆட்சிச் செயற்பாடுகளில் அடிப்படையான மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும். அந்த மாற்றங்கள் சர்வதேசத்துக்குப் பதில் சொல்பவையாக - அவர்களைத் திருப்திப்படுத்துபவையாக இருப்பதைவிடவும், தங்கள் உரிமைகளை மதிக்கும், நியாயமான மற்றும் பொறுப்பான அரசாங்கத்தை எதிர்பார்க்கும் நாட்டு மக்களுக்கானவையாக இருப்பதே முக்கியமானது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

### நாளொரு நல்வார்த்தை

நீ உன் வலது காலை முன்னே எடுத்துவை;
உன் இடது கால் தானாகவே முன்னால் வந்துவிடும்

- நெப்போலியன் -




## மனித உரிமை மீறல்கள்; அமெரிக்கா கடும் கவலை



கொழும்பு, ஓக.15


**இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்கா தனது 2024ஆம் ஆண்டு மனித உரிமை நடைமுறைகள் பற்றிய உள்நாட்டு அறிக்கைகளில் கடுமையாக கவலைகளை எழுப்பியுள்ளது.**

ஜனவரி மற்றும் ஓகஸ்ட் மாதங்களுக்கு இடையில் (முன்னைய ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில்) மனித உரிமைகள் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட 7 தடுப்புக் காவல் மரணங்கள், ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறுவதற்காக சித்திரவதை செய்யப்பட்டனர் எனக் கூறப்படும் சம்பவங்கள் மற்றும் விமர்சகர்களைத் தடுத்துவைக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவை முக்கியமான அவதானிப்புகளில் அடங்கும் என அறிக்கை விவரித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ்ப் பத்திரிகையாளர்களைத் துன்புறுத்துதல், சர்வதேச சமவாயச் சட்டத்தின்கீழ் கைதுசெய்தல் மற்றும் அரசின் பழிவாங்கல் அல்லது விளம்பர வருவாயை இழக்கச்செய்தல் என்ற அச்சத்தால் இயக்கப்படும் சுய தணிக்கை உள்ளிட்டவை அவதானிக்கப்படும் நிலையில், துஷ்பிரயோகங்களுக்கு அதிகாரிகளைப் பொறுப்பேற்கச் செய்வதில் அரசு குறைந்தபட்ச நடவடிக்கைகளையே எடுத்ததாக அந்த அறிக்கை குற்றஞ்சாட்டியுள்ளது.

இணையப் பாதுகாப்புச் சட்டத்தையும் அறிக்கை விமர்சித்துள்ளது. எதிர்ப்புகளை அடக்க இது பயன்படுத்தப்படலாம் என்று அறிக்கை எச்சரித்துள்ளது. தண்டனையிலிருந்து விலக்களித்தல் 'ஒரு குறிப்பிடத்தக்க பிரச்சினையாக' நீடிக்கின்றது என்றும் துஷ்பிரயோகங்களுக்கு குற்றஞ்சாட்டப்பட்ட பாதுகாப்புப் படையினருக்கு எதிரான நீதித்துறை நடவடிக்கை குறைவாகவே இருந்தது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சொக்லெட் திருடிய முதியவர் அடித்துக்கொலை



கொழும்பு, ஓக. 15

கடையில் இருந்து சொக்லெட் திருடினாரெனத் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 67 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாகக் கடையின் உரிமையாளர் மற்றும் உதவியாளரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர்கள் அந்த நபரைத் தங்கள் கடைக்கு அழைத்துச் சென்று தாக்கினரென விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## மீனவர் ஓய்வூதியத் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பம்

கொழும்பு, ஓக. 15

கைவிடப்பட்டிருந்த மீனவர் ஓய்வூதியத் திட்டம் அடுத்த மாதத்தின் முதல் வாரத்திற்குள் மீள ஆரம்பிக்கப்படுமென கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

தகுதியானவர்களை அடையாளங்காணும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இந்தத் திட்டத்தை விவசாய அமைச்சு மற்றும் கடற்றொழில் அமைச்சு ஆகியன இணைந்து மீள ஆரம்பித்துள்ளன என்றும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)



## பிள்ளையானின் துப்பாக்கிதாரி கைது

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனால் (பிள்ளையானால்) செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கொலைகளில் பிரதான துப்பாக்கிச்சூடுகளை நடத்திய முகமட் ஷாகித் என்பவரைக் காத்தான்குடியில் வைத்து குற்றப் புலனாய்வுத் துறையினர் கைதுசெய்துள்ளனர். நேற்றுமுன்தினம் புதன்கிழமை சந்தேகநபர் அவரின் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளை - சோரன்பற்று பகுதியில்

# வீடொன்றின் மீது கொடூர தாக்குதல்

## வாள்வெட்டு குழு அடாவடி

கிளிநொச்சி, ஓக.14

கிளிநொச்சி - பளைப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட சோரன்பற்றுப் பகுதியில், வீடொன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு ஆயுதக் குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.



முகத்தை மூடி மறைத்தவாறு, கத்திகள், வாள்கள் மற்றும் பெற்றோல் குண்டுகளு டன் வீட்டுக்குள் நுழைந்த நால்வர் இந் தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். அத்து டன், வீட்டின் சில உடமைகள் தீக்கிரை யாக்கப்பட்டன என் றும் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் பளை பொலிஸாரிடம் முறைப் பாடு வழங்கப்பட்டுள்ள நிலை யில் மேலதிக விசாரணை களைப் பொலிஸார் முன்னெ டுத்து வருகின்றனர்.

(ம-27)

படகு பழுதாகி கடலில் அந்தரித்த

# யாழ். மீனவர்கள் இருவர் தமிழக மீனவர்களால் மீட்பு

யாழ்ப்பாணம் காங்கேசந்துறையைச் சேர்ந்த இரு மீனவர்கள், படகு பழுத டைந்து நடுக்கடலில் அந்தரித்த நிலை யில், தமிழக மீன்வர்களால் மீட்கப்பட் டுள்ளனர்.

காங்கேசன்துறைப் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்காகச் சென்ற வினோத்கு மார், சிந்துஜன் ஆகிய இரண்டு மீனவர் களுமே, நடுக்கடலில் அந்தரித்த நிலை யில், தமிழக மீனவர்களால் மீட்கப்பட்டு கடலோரக் காவற்படையிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின் றன.

(ம-26-20)

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 12 . 1953



மறைவு 14 . 08 . 2025

## திருமதி மனோகரன் வசுந்திராதேவி (பிள்ளை)

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோகரன் வசுந்திராதேவி 14.08.2025 (வியாழக்கிழமை) நேற்று காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - பராசக்தி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இராசம்மா தம்பதிகளின் மருமகளும், திரு மனோகரனின் (தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை - ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் சுமத்திராதேவி, இந்திரராணி, பத்மாசனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் இரத்தினமணி, காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், துரைராசா மற்றும் மல்லிகாதேவி, காலஞ்சென்ற சந்திரராஜா ஆகியோரின் மைத்துனியும், கஜேந்திரன் (சுவிஸ்), கஜந்தன் (பிரான்ஸ்), கஜவிந்தன் (பிரான்ஸ்), சிவனியா, கஜந்தரூபன் ஆகியோரின் அன்புத் தயாரும், சிவதர்சினி (சுவிஷ்), வனிதா (பிரான்ஸ்), சுபாஷினி (பிரான்ஸ்), ஐங்கரன் (ஆசிரியர்), சுபோசனா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஓவியா, ஒளிநிலா, மதுமிதா, கவிஷா, ஹரினி, காவியன், அக்சரன், ஆத்விகா, லக்ஷ்மிகா, சாதுரியன், வான்நிலா, அபிநயா, கோலநிலா, ஹரிகாலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

**இணுவில் தெற்கு,**
**இணுவில்**

**தகவல்: குடும்பத்தினர்**
**076 643 1300**

(CS 59112) E

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 07 . 1929



மறைவு 12 . 08 . 2025

## பொன்னையா தங்கராஜா

**(ஓய்வு பெற்ற பிராந்திய தபால் அத்தியட்சகர்)**

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தங்கராஜா அவர்கள் கடந்த (12.08.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்பு சகோதரரும், துஷ்யந்தன் (கனடா), தமயந்தி (கனடா), தர்ஷினி (கனடா), Dr.கிரிதரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்தி, நித்தியானந்தம், ஸ்ரீஸ்கந்தராஜா, தயாளினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌதமி, மயூரன், காயத்திரி, ஸ்ரீரமணா, அர்ச்சனா, விசாகன், சுவாதி, தனுஷன், ரியானா, ஜெயராம், ஹரிஹரன், அபிரா ஆகியோரின் பாசமிகு பேரனும், ஆதவன், அஸ்வினி, நவின், வேலன், திவ்வியன், ஆதியன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


**தகவல் :**
**பொ. சிறிஸ்கந்தராசா (மருமகன்)**
**077 638 7566**

**பருத்தித்துறை.**

(CS/009525) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 06 . 1940



மறைவு 11 . 08 . 2025

## அருமைத்துரை கனகசிங்கம்

யாழ். சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் Stanmore, London ஐ வதிவிடமாகவும் கொண்ட அருமைத்துரை கனகசிங்கம் அவர்கள் திங்கட்கிழமை (11.08.2025) அவரது இல்லத்தில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருமைத்துரை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - லஷ்மியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பவதியின் ஆருயிர் கணவரும் கௌரி, கண்ணன், முரளி, சுதா ஆகியோரின் அன்பு தந்தையும், குமாரநாதன், உமாராஜினி, கிருஷ்ணவேணி, மற்றும் குமுதினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ருஷாந்த் - சாம்பவி, அபிநயா - ஆனந்த், சுவேதா, தானியா, ஹரன், கபினாஷ், அக்க்ஷயா ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான யோகாம்பிகை, கமலாம்பிகை, செல்வராஜா, சிவபாலன் மற்றும் ஜெகதாம்பிகை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையன்று (17.08.2025) லண்டனில் நடைபெறவுள்ளது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CS 59111) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்....!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் ஆறாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வுமாநாட்டினையொட்டி அதன் ஒரு பகுதி நிகழ்வாக 'தமிழ்த்தூது–அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக் காட்சிகள் (1966–1981)' எனும் ஒளிப்படக்காட்சியும் இடம்பெறவுள்ளது. அது தொடர்பிலான ஓர் அறிமுகக் குறிப்பு இது.

**மைதிலி விசாகரூபன்**
*பிரதி நூலகர்*
*நூலகம்*
*யாழ். பல்கலைக்கழகம்.*





தமிழியல் சார்ந்த ஆராய்ச்சி முயற்சிகளின் வரலாறு பற்றி மீள்நோக்குச் செய்யும் போது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினைப் பற்றி நாம் சிந்திக்காமல் இருக்கமுடியாது. தமிழ்மொழியின் சீர்சிறப்புக்களையும் தமிழர் வரலாறு மற்றும் பண்பாடு முதலான மேன்மைகள் பலவற்றையும் உலகறிந்த விடயங்களாக்குவதற்கு அரும்பாடுபட்ட தவத்திரு தனிநாயகம் அடிகளார் தனது சிந்தனை வெளிப்பாட்டு ஊடகமாக "Tamil Culture" என்னும் பெயர் கொண்ட ஆய்விதழையும் கூடவே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினையும் ஆரம்பித்தார்.

"Tamil Culture" ஆய்விதழ் 1952ஆம் ஆண்டிலிருந்து ஆங்கிலமொழி மூலத்தில் முத்திங்கள் ஆய்விதழாக வெளிவந்தது. உலகெங்கும் பரந்துவாழ்ந்த பல ஆய்வாளர்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி "Tamil Culture" இல் வெளியீடு செய்தனர். இதன்மூலம் தனிநாயகம் அடிகளாருக்கு உலகளாவிய ரீதியில் ஆய்வறிஞர்களின் தொடர்பு ஏற்படலாயிற்று.

இந்தச் சாதகமான சூழல் பின்னாளில் தமிழாராய்ச்சி மன்றத்தை உருவாக்க வழிசமைத்தது. இத்தகைய ஒரு பின்னணியில் 1964.01.07 இல் இந்தியத் தலைநகரான புதுடில்லியில் தமிழின் உன்னதங்களைப் உரக்கப் பேசும் நோக்கில் அமைந்த அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் (International Association of Tamil Research I.A.T.R) தனிநாயக அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டது.

உலகில் எங்கெல்லாம் தமிழியல் சார்ந்த ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றனவோ அவற்றை "I.A.T.R" மூலமாக ஒன்றிணைத்துச் செயற்படும் சூழ்நிலை இம் மன்றத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டது. சங்ககால இலக்கியமாகிய புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளபடி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதையும், பாரதியார் கூறியபடி "திறமான புலமையெனில் மேனாட்டார் அதனை வணங்கச் செய்தல் வேண்டும்" என்பதனையும் தலையாயக் கோட்பாடாக முன்னிறுத்தி அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் செயற்படலாயிற்று. தொடர்ந்து வந்த காலங்களில் மலேசியா, மொரீசியஸ், பிரான்ஸ், யாழ்ப்பாணம், மதுரை, தஞ்சாவூர் என உலகின் பல்வேறு இடங்களிலும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகளை நடாத்தி உலகப் பொது அரங்கில் தமிழையும், தமிழ்ப்புலமையாளர்களையும் வெளிச்சமிட்டுக் காட்டும் நற்பணி மன்றமாக 'I.A.T.R ஊக்கத்துடன் செயற்படுவதில் வெற்றிகண்டு வந்தது.

ஆரம்பத்தில் "Tamil Culture" ஆங்கில மொழிமூலம் வெளியிடப்பட்டதைப் போன்றே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளும் ஆங்கிலத்திலேயே நடைபெறலாயின. பின்னாளில் 'Tamil Culture" தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலத்தில் வெளிவந்தது. எவ்வாறான நிலையிலும் தமிழ்மொழியை உலக அங்கீகாரம் பெற்ற மொழியாக உயர்த்துவதை நோக்கி நகர்த்துவதே இம் மன்றத்தின் குறிக்கோளாக இருந்துள்ளது. மறைவாகப் பழங்கதைகள் பேசி எமக்குள் நாமே பெருமை கொள்வதைத் தாண்டி, அதற்கும் அப்பாற் சென்று தமிழ்ப் பண்பாட்டையும் அதன் முக்கியமான கூறுகளில் ஒன்றான தமிழ் மொழியையும் கொண்டு செல்ல தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் எடுத்த நன் முயற்சிகளாகவே இவை கருதப்படுகின்றன.




**முதலாவது மாநாடு - கோலாலம்பூர், மலேசியா**

1966 ஆம் ஆண்டு மலேசியாவில் முதல் மாநாடு நடைபெற்றது. மலேசியப் பல்கலைக்கழகம் இதனை ஏற்று நடத்தியது. இந்த மாநாட்டில் இருபத்திரெண்டு நாடுகளைச் சேர்ந்த நூற்றுமுப்பத்தியிரண்டு பிரதிநிதி களும் நாற்பது ஆராய்ச்சி ஆர்வலர்களும் கலந்து கொண்டனர். நூற்றியைம்பது ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்த மாநாட்டில் படிக்கப்பட்டு ஆராயப்பட்டன.

**இரண்டாவது மாநாடு - சென்னை, இந்தியா**

1968 இல் இம்மாநாடு சென்னையில் இடம்பெற்றது. அறிஞர் அண்ணாத்துரை முதலமைச்சராக இருந்த காலத்தில் நடைபெற்ற இம் மாநாடு இந்திய தமிழ்நாடு அரசின் அனுசரணையோடு மிகக் கோலாகலமாக நடைபெற்றது.

**மூன்றாவது மாநாடு - பாரிஸ், பிரான்ஸ்**

1970 இல் பிரஞ்சு நாட்டின் தலைநகரான பாரிஸில் நடைபெற்றது. இம் மாநாடு தமிழாராய்ச்சித்துறையில் மேற்குத்தேசத்தவர்களின் பணிகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

**நான்காவது மாநாடு- யாழ்ப்பாணம், இலங்கை**

1974 இல் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட போது பல சவால்கள் எதிர்கொள்ளப்பட்டுள்ளன. இம் மாநாடு நடந்தேறிய காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாக்கப்படவில்லை. இதனால் நான்காவது மாநாட்டை யாழ்ப்பாணத்திலே ஏற்று நடத்துவதற்குப் பொருத்தமான சூழ்நிலைகள் ஏதும்இன்மையால் யாழ்ப்பாண மக்கள் ஒன்றிணைந்து முழுமூச்சுடன் நடத்திய மாநாடாக இம்மாநாடு அமையலாயிற்று. இம்மாநாட்டில் தமிழ் மக்களின் உணர்ச்சிபெருகி இருந்தது. மக்களால் எழுச்சிபெற்ற மாநாடாக இது அமைந்தது.

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு எதிர்ப்புக்களுக்கும் தடைகளுக்கும் மத்தியில் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்திற் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. இம்மாநாட்டில் நூற்றுப்பதினைந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. தென்னிந்தியா, வட இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, கனடா, சுவிற்சர்லாந்து, இத்தாலி, இங்கிலாந்து முதலிய நாடுகளிலிருந்தும் பல ஆய்வாளர்களும் பார்வையாளர்களும் கலந்துகொண்டனர்.

**ஐந்தாவது மாநாடு மதுரை, இந்தியா**

1981 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஐந்தாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. இதில் நூற்றுத்தொண்ணூற்றேழு ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. சுமாம் எண்ணூறு ஆர்வலர்கள் இதில் பங்கேற்றிருந்தனர். இம்மாநாடு அப்போதைய முதலமைச்சராக இருந்த எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது. தமிழ் இலக்கியம் பற்றியோ தமிழ்மொழி பற்றியோ ஆராயும் உரிமை தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கே உரியது என்றவாறு இருந்துவந்த கொள்கை இவ்வாறான மாநாடுகள் நடைபெற்றதைத் தொடர்ந்து தகர்த்தெறியப்பட்டது.

தமிழாராய்ச்சிகள் பரந்துபட்ட விரிந்த நிலையில் பல துறைகளை உள்வாங்கி முன்னேற்றம் அடைந்தது. இதன் பயனாகத் தமிழ் இலக்கியத்தின் சிறப்புப் பற்றியும் பண்பாட்டு வளர்ச்சி பற்றியும் தொன்மை பற்றியும் மொழியியல் பற்றியும் பல உண்மைகள் வெளிவர உகந்த சூழல் உருவாகலாயிற்று. மொழிகளில் சிறந்த தமிழ் மொழியை அறியாது தமிழரின் அடிப்படைப் பண்பாட்டையும் கலைகளையும் அறியமுடியாது என்றஉண்மை துலாம்பரமாயிற்று.

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியாரின் கனவை நனவாக்க முனைந்த தனிநாயகம் அடிகளார் தமிழ்த்தூது தனிநாயகம் ஆனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் ஆறாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வுமாநாட்டில் கௌரவிக்கப்படவுள்ள ஆளுமைகள்

## கலாநிதி எஸ். சிவலிங்கராஜா




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் மேனாள் தலைவரும் ஓய்வுநிலைப் பேராசிரியருமாகிய கலாநிதி சிதம்பரப்பிள்ளை சிவலிங்கராஜா வடமராட்சி கரவெட்டியில் பிறந்தார். இவர் தனது கல்வியை கட்டைவேலி மெதடிஸ்ற் மிஷன் பாடசாலையில் கற்று, கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையில் சிறப்பாகச் சித்திபெற்றவர். சிறிதுகாலம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்திலே பயின்றவர். பாடசாலைக் காலத்தில் தமிழ்மொழி மற்றும் இலக்கியம் சார்ந்து தனது புலமைத்துவத்தினை நிலைநாட்டி தங்கப் பதக்கங்களையும் சிறப்புகளையும் பெற்றவர். வடமராட்சி கரவெட்டியின் புகழ்பூத்த மரபுவழிப் புலமையாளரான பண்டிதர் க. வீரகத்தியிடம் இலக்கண, இலக்கியங்களை வரன்முறையாகப் பாடம் கேட்டதோடு, பாலபண்டிதர், சைவப் புலவர் பரீட்சைகளில் சித்தி எய்தியவர். மரபுவழித் தமிழ்க் கல்வியின் அடி அத்திபாரத்தோடு நிறுவனவழிக் கல்விப் பாரம்பரியத்தில் நுழைந்து யாழ். பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களான க.கைலாசபதி, சு.வித்தியானந்தன், கா.சிவத்தம்பி, அ. சண்முகதாஸ், எம். ஏ. நுஃமான், நா.சுப்பிரமணியன், கா. இந்திரபாலா முதலியோரிடம் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்று முதற்பிரிவிலே சித்தி எய்தியவர்.

1981 ஆம் ஆண்டு உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்ற இவர், பேராசிரியர்களான க. கைலாசபதி, சு. வித்தியானந்தன் ஆகியோரின் வழிகாட்டலில் "சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் பற்றிய ஆய்வினை" செய்து முதுகலைப் பட்டத்தைப் பெற்றவர். பேராசிரியர் அ. சண்முகதாஸ் வழிகாட்டலில் 'ஈழத்துத் தமிழ் உரைமரபு' பற்றி ஆய்வுசெய்து இவர் கலாநிதிப் பட்டம் பெற்றவர். இவரது கலாநிதிப்பட்ட ஆய்வானது ஆய்வறிஞர்களால் விதந்துரைக்கப்பட்டமை சிறப்பிற்குரியது. 30 ஆண்டுகளுக்கு மேல் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய இவர், தமது சேவைக்காலத்தில் தமிழ்த்துறைத் தலைவராக, பதில் பீடாதிபதியாக, பேரவை உறுப்பினராக, தமிழ் முதுமாணிக் கற்கை இணைப்பாளராக, உயர்பட்டக் கற்கைகள் பீடத்தில் மொழி மற்றும் பண்பாட்டுக் கல்விச் சபையில் தலைவராக பணியாற்றி தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு அளப்பரிய பணி புரிந்துள்ளார். இவை தவிர, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் செயலாளராக சிரேஷ்ட பொது அறையின் பொருளாளராக, ஈவ்லின் இரட்ணம் நூல்நிலையத்தின் இயக்குநராக, தமிழ்மன்றக் காப்பாளராகத் தம் பணிகளை விரிவுபடுத்தியுள்ளார்.

மேலும் கவிஞராக, ஆய்வாளராக, கல்வியியலாளராக, மேடைப் பேச்சாளராக, நடிகராக, பதிப்பாளராக, விமர்சகராக எனப் பன்முக ஆளுமை நிறைந்தவர். தமிழ்ச் செய்யுள்களையும் நவீன கவிதைகளையும் மேடைகளிலே இவர் சொல்லிக்காட்டும் விதம் இவரது தனித்துவமான அடையாளமாக விளங்குகிறது. ஈழத்தத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்புத் தேர்ச்சியுடைய இவர்.பத்துக்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களை எழுதியதோடு ஐந்து நூல்களின் பதிப்பாசிரியராகவும் விளங்குகிறார்.

## க. சட்டநாதன்



ஈழத்துத் தமிழ்ச்சிறுகதை வரலாற்றில் எழுபதுகளில் முகிழ்த்த மூத்த படைப்பாளர் க. சட்டநாதன் 1940 ஆம் ஆண்டு வேலணையில் கனகரத்தினம் பாக்கியலட்சுமி தம்பதிகளின் மகனாகப் பிறந்தார். இவர் 1970 இல் வீரகேசரியில் எழுதிய 'நாணயம்' சிறுகதை முதல் இன்று எண்பத்தைந்து வயதிலும் இளமை குன்றாது எழுத்துப் பணியில் ஈடுபட்டுவருகின்றார். தமிழகத்தில் சென்னை விவேகானந்தாக் கல்லூரியில் பயின்று இளங்கலைப் பட்டம் பெற்றார். இவர் 27 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர். 1967 ஆம் ஆண்டு முதல் 1971 வரை வீரகேசரிப் பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய இவர் ஈழத்தின் மிக முக்கியமான சிற்றிதழ்களில் ஒன்றான பூரணியின் இணையாசிரியர்களில் ஒருவராகவும் பணியாற்றியவர்.

நவீன கலை இலக்கியத் துறையில் மிகுந்த ஈடுபாடுகொண்ட சட்டநாதன் மாற்றம் (1980), உலா (1992) சட்டநாதன் கதைகள் (1996) புதியவர்கள் (2006) முக்கூடல்(2010) பொழிவு (2016) தஞ்சம்(2018) சுபாவம் தாவாடிக்காரர்கள் ஆகிய சிறுகதைத்தொகுதிகளையும் நீரின் நிறம்(2017), துயரம் தரும் அழகு (2019) நீ வருவாயா ஆகிய கவிதைநூல்களையும் உயிரில் கலந்த வாசம் (2019) என்ற நாவலையும் வெளியிட்டவர். "நீளும் பாலை" என்ற இவரது குறுநாவல் பிரபலமானது. அவ்வப்போது இவர் எழுதிய இரசனையும் திறனாய்வும் கலந்த கட்டுரைகள் "சட்டநாதன் கட்டுரைகள்" என்ற பெயரில் வெளிவந்துள்ளன. ஆங்கிலத்தில் ஏ.ஜே.கனகரத்னா, கே.எஸ்.சிவகுமாரன், சோ.ப ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்ட இவருடைய சிறுகதைகள் த சவர் (The Shower ) என்ற பெயரில் வெளிவந்துள்ளன. இவருடைய படைப்புகளைப் பற்றி வெளிவந்த மதிப்பீடுகளும் திறனாய்வுகளும் "சட்டநாதன் கலையும் வாழ்வும்" என்ற தலைப்பில் ஜீவநதி வெளியீடாக வந்துள்ளது. "உலா" சிறுகதைத்தொகுதிக்காக சாகித்திய மண்டல விருதைப் பெற்றுக்கொண்ட இவர் தனது சிறுகதை, கவிதைத்தொகுதிகளுக்காகப் பல தடவைகள் வடமாகாண சாகித்திய விருதினைப் பெற்றுக்கொண்டவர்.

## கலாநிதி துரை. மனோகரன்



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையின் மேனாள் தலைவரும் ஓய்வுநிலைப் பேராசிரியருமாகிய கலாநிதி துரை. மனோகரன் யாழ். உரும்பிராயில் பிறந்தவர். உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்விகற்றுப் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பட்ட மேற்படிப்புக்களைத் தொடர்ந்தவர். புகழ்பெற்ற பேராசிரியரான சு. வித்தியானந்தனின் வழிகாட்டலில் உருவாகியவர். பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் தற்காலிக உதவி விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர். பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்று, சிரேஷ்ட விரிவுரையாளராக, பேராசிரியராக, தமிழ்த்துறைத் தலைவராக எனப் பல்வேறு பதவிகளை அலங்கரித்தவர். பல்கலைக்கழக சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின் பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்பு மாணவர்களுக்கான வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றியவர். இதற்கு மேலாக இலங்கை, இந்தியப் பல்கலைக்கழகங்களிலும் முதுதத்துவமாணி, கலாநிதிப்பட்ட ஆய்வுகளுக்கான பரீட்சகராகவும் கடமையாற்றி வருகின்றார். பண்டைத் தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள், ஈழத்து இலக்கிய வரலாறுகள் சார்ந்து பல நூல்களை எழுதி வெளியிட்ட பெருமைக்குரியவர். இவர் கவிஞராக, புனைகதை ஆசிரியராக, ஆய்வாளராக, கல்வியியலாளராக, மேடைப் பேச்சாளராக, நடிகராக, பாடலாசிரியராக, நாடக ஆசிரியராக, ஆய்வாளராக, விமர்சகராக, கவியரங்கத் தலைவராக சேவையாற்றி தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கு அளப்பரிய பணி புரிந்துள்ளார்.

## பேராசிரியர். ம. இரகுநாதன்



வாழ்நாட் பேராசிரியர் ம. இரகுநாதன் முல்லைத்தீவு முள்ளியவளையில் பிறந்தவர். முல்லை காட்டுவிநாயகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், முல்லை வித்தியானந்தா கல்லூரியிலும் கல்விகற்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்புகளையும் பட்ட மேற்படிப்புகளையும் தொடர்ந்தவர். புகழ்பெற்ற பேராசிரியர்களான க. கைலாசபதி, சு. வித்தியானந்தன், கா. சிவத்தம்பி, ஆ. வேலுப்பிள்ளை, அ. சண்முகதாஸ் முதலானோரின் வழிகாட்டலில் உருவாகியவர்.


இவர் 23.02.1989 ஆம் ஆண்டு தகுதிகாண் விரிவுரையாளராகத் தமிழ்த்துறையில் நியமனம் பெற்றார். தொடர்ந்து இத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளர், இணைப் பேராசிரியர், பேராசிரியர், சிரேஷ்ட பேராசிரியர் எனப் பல்வேறு பதவிநிலைகளைத் தனது 34 ஆண்டுக்கால சேவைக்காலத்தில் வகித்தார். குறிப்பாக பேராசிரியராகப் பதின்மூன்று 13 வருடகாலத்தை இவர் நிறைவுசெய்தவர். தன்னுடைய பணிக்காலத்தில் தமிழ்த்துறைத் தலைவராக, பதில் பீடாதிபதியாக, தமிழ் முதுகலைமாணிக் கற்கைநெறி இணைப்பாளராக, மொழி மற்றும் பண்பாட்டு கல்விச்சபையின் தலைவராக சேவையாற்றியுள்ளார்.

தன்னுடைய பதவிக்காலத்தில் 'சிங்கப்பூர் எஸ்டேட் கந்தையா கார்த்திகேசன் அறக்கட்டளையின் முழுமையான நிதிப்பங்களிப்பில்' அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடுகள் மூன்றினை திறம்பட நடத்தினார். சர்வதேச ஆய்வு மாநாடுகள் பலவற்றில் பங்குபற்றி தன்னுடைய ஆய்வுமுடிவுகளை அளிக்கை செய்த பேராசிரியர். ம.இரகுநாதன், பண்டைத் தமிழ் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள் மற்றும் யாப்பிலக்கணம் தொடர்பில் 12 ஆய்வு நூல்களையும், 6 பதிப்பு நூல்களையும் வெளியிட்ட பெருமைக்குரியவர்.

ஆய்வு நூல்கள் என்ற வகையில், ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள், வன்னிப்பிரதேச நாவல்கள், ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் சாதியம், பெண்ணியம், தேசியம், ஈழத்துத் தமிழ் நாவல்களில் இன உறவு, ஈழத்துத் தமிழ் நாவல்கள் - சில பார்வைகள், பண்டைத் தமிழர் பண்பாட்டுத் தடங்கள், தமிழ்ப்பா வடிவங்களை விளக்கிக் கொள்ளல், முற்போக்கு இயக்கமும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளும், சிலப்பதிகாரமும் ஈழத்துக் கண்ணகி வரலாற்றுக் காப்பியங்களும் ஒப்பாய்வு, ஈழத்துத் தமிழ் நாவல்களில் மீனவக் களங்கள், நந்தியின் நாவல்களில் சமூகநோக்கு, பின்காலனித்துவமும் தமிழ் இலக்கியமும் போன்ற நூல்களை வெளியிட்டார்.

இவரால் கோவலன் நாடகம், சோமசுந்தரப் புலவரின் சிறுவர் செந்தமிழ், தஞ்சைவாணன் கோவை, திருவாதவூரடிகள் புராணம் உரையாசிரியர். ம. க. வேற்பிள்ளையின் உரையுடன், குமாரசுவாமிப் புலவர் இயற்றிய தமிழ்ப் புலவர் சரித்திரம், ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையின் யாழ்ப்பாண வைபவ கௌமுதி போன்றன இவரால் பதிப்பிக்கப்பட்ட நூல்களாகும்.

## ச. விநாயகமூர்த்தி



யாழ்ப்பாணம் தெல்லிப்பழை வறுத்தலைவிளானில் 1941 ஆம் ஆண்டு பிறந்த சபாரத்தினம் விநாயகமூர்த்தி சிறுபராயத்திலேயே சமய நூல்களில் நாட்டமும், பரிச்சயமும் கொண்டவராய் இருந்தார். தனது ஆரம்பக்கல்வியை வறுத்தலைவிளான் அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், இடைநிலை மற்றும் உயர்கல்வியைத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கற்று லண்டன் பல்கலைக்கழகத்தில் உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றார்.

தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் சிறந்து விளங்கிய இவர் ஆரம்பத்தில் தபாலதிபராக பணியாற்றிப் பின்னர் ஆசிரியர் நியமனம்பெற்று 196- 1965 இல் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விசேட பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியராக நெடுந்தீவு மகாவித்தியாலயம், வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் 12 ஆண்டுகள் பணி செய்தார். 1974 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங்களில் சித்திபெற்று கலைப்பட்டதாரியானார். பயிற்றப்பட்ட பட்டதாரியான இவர் 1976 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் போதனாசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டு 2001 இல் சிரேஷ்ட போதனாசிரியராக ஓய்வுபெற்றார். 1977 இல் யாழ். பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்தில் ஓராண்டு பட்டப்பின் படிப்புநெறியைப் பூர்த்திசெய்தார். யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் சிறிது காலம் கடமையாற்றினார்.

வித்துவசிரோமணி கணேசையரின் ஆசிர்வாதம் பெற்ற இவர் 1964 இல் திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்தில் தமது குருநாதர் செந்தமிழ்மணி பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளையின் அருளாசியின்படி சமயச் சொற்பொழிவை ஆற்றத் தொடங்கிப் பல இடங்களில் அப்பணியை மேற்கொண்டு வருகின்றார். அத்துடன் புராணபடனத்திலும் ஈடுபட்டுவருபவர். இந்நாட்டில் வாழ்ந்த, வாழ்கின்ற சமயப் பேரறிஞர்களது நன்மதிப்புக்கும், வழிகாட்டலுக்கும் உரியவராகத் திகழ்கின்றார். நீண்டதோர் மாணவப் பரம்பரையினைக் கொண்டுள்ள இவர், பல்வேறு சமய சார் சஞ்சிகைகளில் கட்டுரைகள், நயப்புரைகள், ஆய்வுரைகள் மற்றும் ஆக்கங்களை எழுதிவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலையில்...

எனும் கருப்பொருளில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியருமான கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் தலைமையில் கலைப்பீட கைலாசபதி கலையரங்கில் காலை 8 மணிக்கு இந்த ஆய்வு மாநாடு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. பேராசிரியர் சி. சிறிசற்குணராசா துணைவேந்தர் உரையையும், பேராசிரியர் சி.ரகுராம் கலைப்பீடாதிபதி உரையையும், சென்னைப் பல்கழைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அரங்க இராமலிங்கன் 'ஆழ்வார்களின் அருந்தமிழ்' எனும் பொருளில் திறப்புரையையும் ஆற்றவுள்ளனர்.

தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் ஈ.குமரன் வரவேற்புரையையும், மாநாட்டின் இணைப்பாளர் சி.செல்வரஞ்சிதம் நன்றியுரையையும் ஆற்றுவார்கள்.

அத்துடன் தமிழறிவுப் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்கள் நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். இதே வேளை, ஓய்வுநிலைப் பேராசிரியர்களான கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி துரை.மனோகரன், வாழ்நாள் பேராசிரியர் ம.இரகுநாதன், மூத்த படைப்பாளர் க.சட்டநாதன், திருவாளர் ச.விநாயகமூர்த்தி ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-25)

## செம்மணி...

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் ஆய்வுகளின் அடிப்படையிலும், புதைகுழி மீதான அகழ்வுப் பணிகளின் செல்நெறியைக் கருத்திற்கொண்டும், குறைந்தது மேலும் எட்டு வாரங்களேனும் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் நீதிமன்றத்தில் சமர்ப்பணம் செய்தார்.

இதையடுத்து, மேலதிகமாக எட்டு வாரங்கள் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டார். இதற்குரிய பட்ஜெட்டை சமர்ப்பிக்குமாறும் நீதவான் அறிவுறுத்தியுள்ளார். (அ-ம-26)

## செஞ்சோலைப்...

19ஆவது நினைவுதினம் தமிழர் தாயகத்தில் நேற்றுப் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி காலை 7 மணியளவில், வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில் முகாமைத்துவப் பயிற்சிநெறியை முன்னெடுத்த மாணவிகள் மீது இலங்கை விமானப்படையின் கிபிர் விமானங்கள் தாக்குதல் மேற்கொண்டன.

இந்த மிலேச்சத்தனமான தாக்குதலில் 51 பாடசாலை மாணவிகள், இரு பணியாளர்கள் உட்பட 53 பேர் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் பல மாணவிகள் படுகாயங்களுக்கு உள்ளாகினார்கள். இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட மாணவிகளின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல், வள்ளிபுனம் செஞ்சோலை வளாக வீதிச் சந்தியில் பிரத்தியேக கொட்டகை அமைக்கப்பட்டு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

உயிரிழந்த மாணவிகளின் உறவினர்கள், பொதுமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் து.ரவிகரன் உள்ளிட்ட அரசியற் பிரமுகர்கள் என நூற்றுக்கணக்கானோர் இதில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். (அ-ம-100-113-19)

## நாட்டின்...

முன்னர் கணிக்கப்பட்டதையும் விட, மிகத் துரிதமான கதியில் பொருளாதாரம் ஏற்றம்பெற்று வருகின்றது. எதிர்வரும் ஆண்டில் பொருளாதார நெருக்கடிக்கு முந்தையை நிலையை இலங்கை அடைவதற்குச் சாத்தியங்கள் உள்ளன.

பல்வேறு அர்ப்பணிப்புகளை மேற்கொண்டே நாட்டின் பொருளாதாரத்தில் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நாங்கள் கணித்ததையும் விட நல்ல பெறுபேறுகளைத் தருகின்றன. நெருக்கடியில் வீழ்ந்த நாடு, மீண்டும் தன்னைத் திடப்படுத்த குறைந்தது ஐந்து ஆண்டுகளாகும். ஆனால், இலங்கை மூன்று வருடத்துக்குள் அந்த நிலையை எட்டியுள்ளது. வேலைவாய்ப்பு, வறுமைக் குறைப்பு, தனிநபர் வருமான அதிகரிப்பு போன்ற விடயங்களில் அடுத்த வருடம் கவனம் செலுத்தப்படும் - என்றார். (அ-ம)

## சர்வதேச...

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில், கண்காட்சிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரத்தியேகப் பகுதியில் இந்தப் புத்தகத் திருவிழா இடம்பெறவுள்ளது. இந்தப் புத்தகத் திருவிழாவை, பொதுமக்கள் மிகவும் வரவேற்கவேண்டும் என்றும், ஒன்றுகூடிக் கொண்டாடுமாறும் சிறகுகள் அமையம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

'யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் திருவிழா' இம்முறை இரண்டாவது தடவையாக நடைபெறவுள்ளது. கடந்த ஆண்டு இடம்பெற்ற புத்தகத் திருவிழா ஆயிரக்கணக்கான வாசகர்களை ஈர்த்து, யாழ்ப்பாணத்தின் கலாசார மற்றும் அறிவுசார் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியது. அந்த வெற்றியைத் தொடர்ந்து, இம்முறையும் நாடு முழுவதுமிருந்து பல முன்னணி புத்தக நிறுவனங்கள் கலந்துகொள்ளவுள்ளன. சிறந்ததரம் வாய்ந்த புத்தகங்கள், பல்வேறு தலைப்புகளின் கீழ் சிறப்பு விலைக்கழிவுகளுடன் இங்கு கிடைக்கின்றன. இது, உங்கள் தனிப்பட்ட நூலகத்தை வளர்த்துக்கொள்ளவும், அறிவைப் பெருக்கிக்கொள்ளவும் ஓர் அரிய வாய்ப்பு. அத்துடன், இந்தத் திருவிழா பல்வேறு அறிவுசார் மற்றும் கலைநிகழ்வுகளையும் உள்ளடக்கியுள்ளது.

இதன்படி, இந்த புத்தகத் திருவிழா, அறிவு மற்றும் கலைத் திறன்களை வளர்ப்பதற்கான ஓர் அற்புதமான தளமாக அமைந்துள்ளது. குறிப்பாக, இளைய தலைமுறையினர் மற்றும் குழந்தைகளை வாசிப்பின் இன்பத்தில் ஈடுபடுத்த இது ஒரு சிறந்த வாய்ப்பு. புத்தகங்கள், எமது சிந்தனைக்கு புதிய திசைகளைத் திறக்கும், உலகைப் புரிந்துகொள்ள உதவும், மேலும் படைப்பாற்றலை ஊக்குவிக்கும். புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டு, வாசிப்பின் மகிமையை உணர்ந்து, உங்கள் அறிவைப்பெருக்கிக்கொள்ளுமாறு அனைத்து மக்களையும், குறிப்பாக மாணவர்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

சிறகுகள் அமைய செயற்பாட்டாளர்கள் இந்த மூன்று நாள்களிலும் புத்தகத் திருவிழாவில் படிப்பகம் திட்டத்தினூடாக நூலக வசதிகள் தேவையான கிராமங்கள் மற்றும் பாடசாலைகளுக்கான நூலகங்களை உருவாக்க புத்தக சேகரிப்புச் செயற்பாட்டை மேற்கொள்ளவுள்ளனர். உங்களிடம் உள்ள பயன்படுத்தப்பட்ட, நல்ல நிலையில் இருக்கும் புத்தகங்களை நன்கொடையாக வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் சிறிய பங்களிப்பு, கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் எங்கள் பயணத்திற்கு பெரும் உந்துதலாக அமையும் - என்றுள்ளது. (அ-ம-இ)

## படுகொலைச்...

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் நீதிமன்றில் சுட்டிக்காட்டினார்.

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கு நிறைவடைந்த பின்னர், ஊடகங்களிடம் சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:-

1999ஆம் ஆண்டு செம்மணியில் 15 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டிருந்தன. சோமரட்ன ராஜபக்ச என்கின்ற மரண தண்டனைக் கைதி மரண தண்டனை விதிக்கிறபோது மேல் நீதிமன்றத்திலே சொன்ன கூற்றின் அடிப்படையிலேதான் அந்த அகழ்வு நடத்தப்பட்டது. ஆனால் 15 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மட்டும்தான் கண்டெடுக்கப்பட்டன. அது அகழ்வதற்கு முன்னதாக அவர் செய்த கூற்றிலே 300 தொடக்கம் 400 வரையான என்று அவர் சொல்லியிருக்கிறார்.

ஆனாலும் அந்த வேளையில் செய்த அகழ்வுப் பணியிலே 15 மட்டும்தான் கண்டுபிடிக்கப்பட்டது. இப்பொழுது ஏற்கனவே 150 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் இங்கே கண்டெடுக்கப்பட்டிருக்கிற காரணத்தாலும், அவர் காண்பித்த இடத்துக்கு மிக அருகாமையில் இது இருப்பதாலும் இதைத்தான் அவர் சொல்லியிருக்க வேண்டும்.

26 வருடங்களுக்குப் பிறகு இது தற்செயலாக கண்டெடுக்கப்பட்டதாக இருந்தாலும் இப்படி இங்கே நூற்றுக் கணக்கான உடல்கள் புதைக்கப்பட்டதென்று அவர் 26 வருடங்களுக்கு முன்னர் சொன்னது சரிதான் என்பது இப்பொழுது நிரூபணமாகிறது. இந்த அடிப்படையில் அந்த விடயத்தோடு இந்த விடயமும் தொடர்புபட்டது என்பது கண்கூடாகக் தெரிகிறது என்ற சமர்ப்பணத்தை நீதிமன்றில் முன்வைத்தேன்.

சோமரட்ன ராஜபக்ச எந்தக் காலப் பகுதியிலே இங்கு உடல்கள் புதைக்கப்பட்டது என்று சொன்னாரோ அதே 1999ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தப் பிரதேசத்திலே பலர் காணாமல் ஆக்கப்பட்ட முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமை சங்கத்துக்குக் கொடுக்கப்பட்டன. இதையடுத்து, கலாநிதி தேவநேசன் நேசையாவின் தலைமையில் இன்னும் மூவரடங்கிய விசாரணைகுழு நியமிக்கப்பட்டு அவர்கள் 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் 28ஆம் திகதி தங்களுடைய விசாரணை அறிக்கையை சமர்ப்பித்தனர்.

210 பக்கங்கள் அடங்கிய அந்த அறிக்கையொன்றின் பிரதியை நான் மன்றுக்கு சமர்ப்பித்தேன். அந்த அறிக்கையிலே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அரியாலை, சாவகச்சேரி, நாவற்குழி, யாழ்பாண நகர் மற்றும் நகரை அண்மித்த பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் இதில் 300 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் இருந்தாலும் 200 இற்கும் மேற்பட்டவைக்கு படைத்தரப்பினரே பொறுப்பானவர்கள் என்றும் திட்டவட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதில் பல விபரங்களும் சொல்லப்பட்டு இருக்கின்றன. அந்தப் படைத்தரப்பினர் யார், எந்தெந்த முகாம்களில் இருந்தார்கள்? அந்த முகாம்களுக்கு பொறுப்பாக இருந்தவர்கள் யார்? என்ற விபரங்கள் எல்லாம் அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினாலே இந்த விபரங்களை இப்பொழுது மன்றிலே சமர்ப்பிக்கின்ற பொழுது இதற்குப் பொறுப்பாக இருந்திருக்கக் கூடியவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு சந்தர்ப்பம் கூடுதலாக இருக்கிறது. ஆதலால், இது சம்பந்தமாக உரிய உத்தரவு கொடுக்கவேண்டுமென நான் கோரியிருக்கிறேன். அப்படியான ஓர் உத்தரவையும் மன்று செய்யவில்லை. ஆனால் அது சம்பந்தமாக அறிந்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கூறப்பட்டிருக்கிறது - என்றார். (அ-ம-26)

## சி.ஐ.டி.யினரின்...

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சாட்சிகள் அச்சுறுத்தப்படுகின்றனர் என்ற விடயம், நீதிமன்றத்தின் கவனத்துக்கு நேற்றுக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்தே, செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் தற்போதைய தலையீடு அவசியமற்றது என்ற விடயத்தை சட்டத்தரணி சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

செம்மணிப் புதைகுழி தொடர்பில் தற்போது மரண விசாரணைகளும், அடையாளப்படுத்தல் நடவடிக்கைகளும்தான் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தப் பணிகள் முடிந்த பின்னர்தான் புலன் விசாரணைகள் ஆரம்பமாகும். ஆனால், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தற்போதிருந்தே இந்த விடயத்தில் விசாரணைகளையும் அவதானிப்புகளையும் மேற்கொண்டு வருகின்றனர். ஆரம்பத்தில் நாங்கள் அதை எதிர்க்கவில்லை. ஆயினும், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தொடர்பில் முன்வைக்கப்படும் முறைப்படுகளைப் பார்க்கின்றபோது, அவர்களை இந்த விடயத்தில் இருந்து தற்போதைக்கு அகற்றி வைப்பதே பொருத்தமாக இருக்கும் என்று சுமந்திரன் மேலும் சமர்ப்பணம் செய்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்துவதை மன்று உறுதிப்படுத்தியது. ஆனால், சட்டத்தரணி சுமந்திரன் கோரியது போன்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை. (அ-ம-26)

## வாக்குமூலம்...

பட்டவர்கள் சார்பான சட்டத்தரணிகள் மன்றுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

செம்மணிப் புதைகுழி வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, செம்மணிப் புதைகுழி தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்ட சாட்சியங்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் அச்சுறுத்தினார்கள் என்ற முறைப்பாட்டை பாதிக்கப்பட்டோர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் முன்வைத்தனர்.

இந்த விடயம் தொடர்பில் கவனத்தில் எடுத்த நீதவான், சாட்சியங்கள் யாரிடமேனும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வாக்குமூலம் பெறுவதாயின் மயானத்தில் வைத்து ஏனையவர்கள் முன்னிலையில் வாக்குமூலத்தைப் பெறுமாறு கட்டளை பிறப்பித்தார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணிச்சுமை சற்று அதிகரிக்கும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** பரபரப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் அணுகுவது நல்லது. வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புண்டு. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** உடல் நலனில் கவனம் தேவை. கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் குறைவாகவே கிடைக்கும். எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம்.

**மீனம்:** ஆதாயகரமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.



கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தின்

## 'இதயபூர்வமாக யாழுக்கு' நடமாடும் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 15

'கிளீன் ஸ்ரீலங்கா' செயற்றிட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகம், வடக்கு மாகாண சபை, யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணிப் பிரதேச செயலகங்கள் இணைந்து நடத்தும் 'இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு' எனும் விசேட நடமாடும் சேவையின் ஆரம்ப நிகழ்வு நேற்று வியாழக்கி ழமை யாழ்.பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் ஆரம்பமாகியது.

இதேவேளை நேற்று யாழ்.மாவட்டத்தில் ஆரம்பமான இந்த விசேட நடமாடும் சேவை தொடர்ச்சியாக ஒரு வாரகாலத்துக்கும் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெறவுள்ளது.

இந்த விசேட நடமாடும் சேவை இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (ச-66)

## அரங்கத் திறப்பும் நாடக அறிமுகமும்

யாழ்ப்பாணம், ஓக.15

கைதடி தெற்கு நாவற்குழியில் அமைந்துள்ள ராஜ பத்மினி அரங்கத் திறப்புவிழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் பரந்தன் மத்திய கல்லூரி அதிபர் திருமதி ச.ஜெயந்தி தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் இ.கிருஷ்ணகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ச-41-63)

ஊர்காவற்றுறையில்

## சுன்னாகத்தில் களவாடப்பட்ட நகைகளுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம்,ஓக. 15

சுன்னாகத்தில் களவாடப்பட்ட பெறுமதிமிக்க நகைகள் மற்றும் கைத்தொலைபேசிகளுடன், பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நாரந்தனைப் பகுதியில் வைத்து ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வீதிக் கண்காணிப்பு நடவக்கைகளில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் அணியினர் நாரந்தனை பகுதியில் ஈடுபட்டிருந்த போது வீதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய குறித்த நபரை மறித்து சோதனையிட்டபோது அவரது உடைமையில் தாலிக்கொடி, சங்கிலி, மோதிரங்கள் உள்ளிட்ட நகைகள் அவதானிக்கப்பட்டன.

இதையடுத்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவை சுன்னாகம் பகுதியில் களவாடப்பட்ட பெறுமதிமிக்க நகைகள் எனத் தெரியவந்தது.

இதையடுத்து குறித்த சந்தேகநபரின் வீட்டுக்குச் சென்று சோதனைகளை மேற்கொண்டபோது அங்கு பல நவீன கைத் தொலைபேசிகள், ஒருதொகைப்பணம் இலத்திரனியல் சாதனங்கள் உள்ளிட்ட பல பொருள்களைப் பொலிஸார் கைப்பற்றினர். குறித்த சந்தேகநபரையும் மீட்கப்பட்ட பெறுமதிமிக்க பொருள்களையும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ச-20,27,66)

## 'நீர்வளம் பேணுதல்' கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம், ஓக.15

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழகத்தின் பல ஆய்வுத் துறைகளின் கூட்டு முயற்சியாக வடமாகாண நீர்வளம் பேணுவதற்கான பேராய்வுச் செயற்றிட்டத்தின் இரண்டாவது மாபெரும் கண்காட்சி நல்லூர் பாரதியார் சிலைக்கு அருகில் அமைந்துள்ள நெசவுக் கைத்தொழிற் பயிற்சி நிறுவன வளாகத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் மற்றும் உயரதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை திறந்திருக்கும் கண்காட்சியில் பல்வேறு ஆய்வுப் பெறுபேறுகள் உள்ளடங்கிய சீரமைக்கப்பட்ட காட்சிப் பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

நாளை சனிக்கிழமை முதல் கண்காட்சி நிறைவுநாள் வரை தினமும் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை கண்காட்சியை அனைவரும் பார்வையிட்டுப் பயன்பெற முடியும். (ச-25,66)

## பலஸ்தீனத்துக்கு ஆதரவாக கொழும்பில் இன்று பேரணி

கொழும்பு, ஓக.15

பலஸ்தீனில் இடம்பெற்றுவரும் இஸ்ரேலின் இனப்படுகொலையைக் கண்டித்தும் சுதந்திர பலஸ்தீனத்தைப் பிரகடனப்படுத்தவேண்டும் என்று சர்வதேசத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலும் இன்று நடத்தப்படவுள்ள பேரணியில் இலங்கையர்களாக அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்று பலஸ்தீனுக்காக ஒன்றிணையும் இலங்கையர்கள் அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பலஸ்தீனத்தில் இடம்பெறுவது போருக்கு அப்பாலானதொரு விடயமாகும். இந்த நாட்டில் வாழக்கூடிய அனைத்தின மக்களும் அரசியலுக்கு அப்பால், பலஸ்தீன மக்களுக்காக குரல் கொடுக்க ஒன்றிணையவேண்டும் என்றும் அந்த அமைப்பினர் குறிப்பிட்டனர். (எ-இ)

## பச்சிலைப்பள்ளி பண்பாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.15

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் நிதியனுசரணையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச கலாசாரப் பேரவை இணைந்து நடத்தும் பண்பாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச கலாசாரப் பேரவையின் தலைவரும் பிரதேச செயலாளருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தி னர்களாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பணிப்பாளர் திருவாட்டி லாகினி நிருபராஜ், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைத் தவிசாளர் சு.சுரேன், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்டச் செயலக சிரேஷ்ட உத்தியோகத்தர் திருமதி கி.மாலினி, பளை கச்சார்வெளி தொழிலதிபர்(லண்டன்) ந.காந்தரூபன், அதிதிக் கலை விருந்தினராக பளை தம்பகாமம் ஒப்பனைக் கலைஞர் கலாபூஷணம் செ.தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது கந்தசாமி தெட்சணாமூர்த்தி, வாரித்தம்பி உதயகுமார், வடிவேலு ஞானச்செல்வம் ஆகியோருக்கு கலைத்தென்றல் விருதும் திருமதி சரணீதரன் சரண்யாவுக்கு இளங்கலைஞர் விருதும் வழங்கப்படவுள்ளன. (ச-41)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.08. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.